**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஜுன் மாதம் 13-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.ஜி.அசோக் பிரசாத், பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.இ.என்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.856/2022

வா.சா.1 சரவணன், த/பெ.ஆனந்தன்

<u>**1, 2** பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்தது நானும், எனது மனைவி செண்பகவள்ளி ஆகும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் ஏற்படுத்தி கொடுத்தது நானும், எனது மனைவி செண்பகவள்ளி ஆகும். அதில் மூன்றாவது நபராக கருப்புசாமி என்பவர் பெயர் உள்ளது. அவரை எனக்கு தெரியும். கருப்புசாமியை இந்த வழக்கில் வழக்கு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கருப்புசாமியை வழக்கில் சேர்க்காமலேயே அவருடன் ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டு தற்போது வழக்கு நடத்துகிறேன்.

2. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 2ம் பக்கத்தில் மூன்று இலக்கமிட்டவரால் கிரயம் முடித்துக்கொள்ள இயலாததால் மூவரும் சேர்ந்து 1701/2014 எண்ணுள்ள கிரய ஒப்பந்தத்தை மூவரும் ரத்து செய்துகொள்ள முடிவு செய்துள்ளதாக கண்டுள்ளது அதில் கையொப்பமிட்ட 1 இலக்கமிட்டவர் நான். 2 இலக்கமிட்டவர் எனது மனைவி செண்பகவள்ளி. 3 இலக்கமிட்டவர் கருப்புசாமி ஆவார். 17.02.2016ல் இணை சார்பதிவாளர்-1, ஈரோடு அலுவலகம் சென்று வா.சா.ஆ.4 ஆவணத்தை விஸ்வநாதனுடன் ஏற்படுத்திக்கொண்டேன்.

3. வா.சா.ஆ.4 ஆவணத்தில் வழக்கு சொத்தை குறிப்பிட்டு ஏற்படுத்தி கொடுத்துள்ளேன். 11.07.2016அன்று மேற்கண்ட இணை சார்பதிவாளர் அலுவலகம் சென்றிருந்தேன். அங்கு விஸ்வநாதன் மனைவி தமிழ்செல்வி பெயரில் பொதுஅதிகார பத்திரமான வா.சா.ஆ.5 பதிவு செய்யப்பட்டது.

4. தமிழ்செல்வி பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் விஸ்வநாதனுக்கு கிரையம் ஏற்படுத்தி கொடுத்ததை நான் தெரிந்துகொண்டேன். அந்த ஆவணம் தான் வா.சா.ஆ.6 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 ஆவணத்தில் 1ம் பிரதவாதியான விஸ்வநாதன் 3ம் பிரதிவாதியான தெய்வசிகாமணிக்கு வழக்கு சொத்தை கிரையம் செய்து இருக்கும் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

5. காவல்துறை கண்காணிப்பாளர், ஈரோடு என்பவருக்கு புகாரை ஒரு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பியிருந்தேன். அது வா.சா.ஆ.8 ஆகும். அந்த வா.சா.ஆ.8 ஆவணத்தில் பிரதிவாதிகள் வழக்கு சொத்தை ஏமாற்றி அபகரித்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் என்ன காரணத்திற்காக வா.சா.ஆ.8 ஆனது பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது என்றால் நான் ரங்கம்பாளையம் காவல்நிலையத்திற்கு சென்று புகார் சொன்னேன் ஆனால் எழுதுப்பூர்வமாக புகார் கொடுக்கவில்லை.

6. இதுகுறித்து வா.சா.ஆ.8 ஆவணத்தில் நான் ரங்கம்பாளையம் காவல்நிலையத்திற்கு சென்று வாய்மூலமாக புகார் கொடுத்து அதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். எனது புகார் ஈரோடு தாலுக்கா காவல்நிலையத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டு அங்கு விசாரணை நடந்தது. அந்த விசாரணை தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேலும் நான் கொடுத்த புகாரில் எவ்வித முகாந்தரமும் இல்லை என்பதால் தான் விசாரணை தொடர்பான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணமானது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று குறிப்பிடும் நான் பதிவாளர் முன்னிலையில் குற்றவியல் நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். அது தொடர்பான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் இதுதொடர்பான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை

என்பதால் தான் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. ஊரிலுள்ள பொதுவான நபர்களிடம் இவ்வழக்கு குறித்து புகார் செய்தேனா என்றால் இல்லை. பதிவாளர் அலுவலகம் சென்று ஆவணங்களை ஏற்படுத்தி பதிவு செய்துகொண்டு தற்போது அந்த பதிவு செய்த ஆவணங்களில் உள்ள சங்கதிகளுக்கு மாறாக வாய்மொழியாக தவறான சாட்சியத்தை அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ளது போல் தொகைகள் செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கு மாறாக அந்த தொகைகள் கடனுக்காக கொடுக்கப்பட்ட தொகைகள் என்று தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கடனுக்காக தொகைகள் செலுத்தப்பட்டது என்று தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கொரோனாவிற்கு பிறகு ஆவணங்களை ரத்து செய்ய பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டதாக நான் கூறியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. 20.06.2022 அன்று அலைபேசி மூலம் நான் பிரதிவாதியை அழைத்து பேசியதாகவும், பின்னிட்டு நம்பிக்கையுடன் காத்திருந்ததாகவும் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரம் தவறானது என்றால் சரியல்ல. 07.07.2022 அன்று வில்லங்க சான்றிதழை பார்த்தாகவும், அப்போது தான் பொது அதிகார ஆவணத்தை வைத்து 17.02.2016 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை சுட்டி காட்டி 23.06.2022 தேதியிட்ட கிரைய ஆவணம் பற்றி தெரிந்து கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளது இந்த வழக்கிற்காக சொல்லும் பொய்யான விவரம் என்றால் சரியல்ல.

10. தாவா சொத்தானது எனது சுவாதீனத்தில் இல்லை என்பதால் தான் சுவாதீனம் தொடர்பாக எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 17.02.2016 கிரைய உடன்படிக்கை மற்றும் 11.07.2016 தேதியிலுள்ள பொதுஅதிகார ஆவணம் ஆகியவற்றை பொறுத்து நிவாரணம் எதுவும் கோராமல் 23.06.2022 மற்றும் 08.07.2022 தேதிகளிட்ட கிரைய ஆவணங்களை ஆட்சேபணை செய்ய இயலாது என்றால் சரியல்ல.

11. ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் உரிய காலக்கெடுவிற்கு பின்னர் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்பதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**3ம் பிரதிவாதிகள் வழக்கறிஞர் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**